**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 8 (LW11)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழக்காக்குளத்தில் வசித்து வருகிறேன். சாட்சி ராஜாவை எனக்குத் தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள், காலை சுமார் 10.00–11.00 மணியளவில் கருப்பையா என்பவர் இறந்துகிடப்பதாக தகவல் கிடைத்து அந்த இடத்திற்கு நான் போனேன். போலிசார் அங்கு வந்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் போலிசார் அங்கு கிடந்த கைலி, சட்டை, துண்டு, பைக், செருப்பு மற்றும் இரத்தம்பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:05 +0530

அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்தேன். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் கைப்பற்றிய பைக்தான் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள பைக் ஆகும். அந்த **பைக் சா.பொ.1** ஆகவும், அதன் **புகைப்படங்கள் மற்றும் சிடி அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ 5** ஆகவும் முறையே ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் **துண்டு, செருப்பு, இரத்தம்பட்ட மண், இரத்தம் படாத மண்** ஆகியவை போலிசார் அந்த இடத்தில் இருந்து கைப்பற்றியவை தான். அவை முறையே **சா.பொ.2 முதல் சா.பொ.5** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகின்றன. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் எழுதாத வெள்ளைப்பேப்பர்களில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் மட்டும்தான் கையொப்பம் செய்தேன். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அந்த கையொப்பங்களை நான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:08 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .